திருவள்ளுவர் ஆண்டு 2043

ஆகஸ்டு - 2012

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 10

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



இந்தியத் திருநாட்டின் 66வது சுதந்திர தின கொடியேற்றும் விழா

நாள் : 15-8-2012 காலை 9-00 மணி

கல்லூரிச் செயலாளர் இரா. குருசாமி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிச் சிறப்பிக்க உடன் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர், ஆட்சிக்குழு முதல்வர் மற்றும் மாணவர்கள்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 10 திருவள்ளுவர் ஆண்டு 2043

ஆகஸ்ட் 2012




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---


**ஆசிரியர்**

**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பட்டதும் போதும்; கெட்டதும் போதும் | புலவர். சா. பன்னீர் செல்வம் | 4 |
| திருவருட்பாவில் இலக்கிய வகைகள் | க. சாந்தி | 14 |
| திருவிளையாடற் புராணங்களில் இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் | முனைவர் பி. ஆறுமுகம் | 19 |
| தேவாரத்தில் உதவிமாணிகுழித் தொடர் – ஓர் ஆய்வு | தருமையாதீனப் புலவர் தா. குருசாமி தேசிகர் | 29 |
| பட்டடை | ஆறுவிரல் ஐம்பொறி | 35 |
| எமனையே ஏமாற்றிய ஏந்தல் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 37 |
| தாங்குவார் யார்? | சமுத்திரமணாளன் | 39 |
| அறிவியல் வளர்ச்சி | புலவர் ந. ஞானசேகரன் | 40 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

2012 ஆகஸ்டு மாத செந்தமிழ் இதழை ஐம்பெரும் ஆய்வுக் கட்டுரைகளோடும், கவிவேந்தர் ஞானசேகரன் மற்றும் சமுத்திராமணாளன் மரபுக் கவிதைகளோடும் தங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமையடைகிறோம்.

மூன்று முறை சூடுபட்ட பின்னரும் தமிழினத்திற்குப் புத்தி வரவேண்டாமா? என்ற கேள்வியுடன் பட்டதும் கெட்டதும் போதும் என்னும் தலைப்பில் புலவர் சா. பன்னீர்செல்வம் அவர்கள் தந்துள்ள தமிழ் மொழி ஆராய்ச்சிக் கட்டுரை இம்மாத இதழின் தகுதியை தூக்கி நிறுத்தும் கட்டுரையாகப் போற்றப்படும் எனக் கருதுகிறோம்.

அடுத்ததாக க. சாந்தி அவர்களுக்கு திருவருட்பாவின் இலக்கிய வகைகள் என்னும் கட்டுரை அருட்பிரகாச வள்ளலாரின் இலக்கியப் புலமையையும் இலக்கியத் தொன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமை பாராட்டிற்குரியது.

முனைவர் பி. ஆறுமுகம் அவர்கள் சிறந்த ஆய்வாளர் என்பதை மதுரை மாநகரை மையமாகக் கொண்ட இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோவிலின் சிறப்பை திருவிளையாடற் புராணங்களின் வழி நிறுவியிருக்கிறார்.

திருஞானசம்பந்தரின் திருமாணிக்குழிப் பதிகத்தை எடுத்து ஆய்வு செய்யும் உத்தி மரபு வழிப்பட்ட சைவ சமய சான்றோர்க்கே உரித்து என்பதை புலவர் தா. குருசாமி தேசிகர் தம் ஆய்வுக் கட்டுரையில் நிறுவி இருப்பது வியப்பிற்கும், வழிபாட்டிற்கும் உரியது.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் தனக்கே உரிய பாணியில் திருக்குறளில் வரும் பட்டடை என்ற சொல்லை எடுத்துக் கொண்டு பொருள் விளக்கம் தந்து சிறப்பிக்கிறார்.

நிறைவாகக் கவிதைகளோடும் வாசகர் வாசகத்தோடும் இம்மாத இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# பட்டதும் போதும்; கெட்டதும் போதும்

புலவர். சா. பன்னீர் செல்வம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அண்மையில் - (பிப்ரவரி - 2012) - ஒரு தொலைக் காட்சியில் ஓடிக்கொண்டிருந்த செய்திவரிகளில், ஆஸ்திரேலியாவில் ஆழங்கட்டியுடன் கனமழை போக்குவரத்து பாதிப்பு" - என்னும் வரியும் காண நேர்ந்து. கல்வெட்டுப் பொறிப்பாளர் அனைவரும் முறையாகத் தமிழ் படித்த புலவர்களல்ல. அக்காலத்திய குறை கல்வியாளரான, கல்வெட்டுப் பொறிப்பாளர் நீக்கி - எனப் பொறிப்பதாக நினைத்து, நிக்கி - எனப் பொறித்திருக்கலாம். கல்வில் சுழித்துப் பொறித்தல் சிக்கலாகும் என்பதாலும் சுழிக்காமல் விட்டிருக்கலாம். அது கொண்டு அக்கால மக்கள் ஈகார நெடிலை இகரக் குறிலாக உச்சரித்தாகக் கொள்ளுதல் முறையான ஆய்வாகாது.

கல்வெட்டுகளில் பேச்சு மொழித்தாக்கமும் உண்டு; கல்வெட்டாளரின் குறைக் கல்வித் தாக்கமும் உண்டு. ஆயினும் கல்வெட்டுத் தமிழின் பெரும் பகுதி பேச்சு மொழிக்குச் சான்றாவதை மறுத்தற்கில்லை. அவ்வாறே இக்காலத்திய உரை - என்பது, முற்றிலும் யாப்பமைதி யிழந்துவிட்டமையும் மெய்ப்பாடாகிறது.

## திசைச் சொல்

தொல்காப்பியர் திசைச் சொல் என்னும் பெயரால் வட்டார வழக்கு. சொற்களையும் இலக்கியத்திற்குரிய சொல்வகையாகக் கூறுதலின், வட்டாரப் பேச்சு மொழியில் எழுதுதலும் மொழிமரபுக்கு உட்பட்ட தென்னும் மயக்க நிலையும் நிலவுகிறது.

திசைச் சொல், அல்லது வட்டார வழக்கு என்பது வேறு; கொச்சை வழக்கு, அல்லது பேச்சு வழக்கு என்பது வேறு; பேச்சு வழக்கையே திசைச் சொல் எனல் ஆசிரியர் கருத்தாயின்,

*வழுவின வாயினும் வாய்மொழி யதுவே*
*திசைச்சொல் என்பர் தீந்தமிழ்ப் புலவர்*

என்றாற் போல ஓதியிருப்பர். கிளைமொழி எனப்படும் வட்டார வழக்கும் கொச்சை வடிவம் பெறும். பொது மொழியும் கொச்சை வடிவம் பெறும். வட்டாரப் பேச்சு மொழியைத் திசைச் சொல் எனின், பொதுப் பேச்சு மொழியை என்னென்று கூறலாம்? அதற்கும் ஒரு பெயர் வேண்டுமன்றோ? இது குறித்த விளக்கத்தை, திசைச் சொல்விளக்கம் – தமிழ்ப் பொழில் – செப்டம்பர், அக்டோபர் – 1996 – என்னும் ஆய்வுரையிற் காண்க, ஆசிரியர் கூறும் திசைச் சொல் வட்டார வழக்காகும். திருத்தமான சொல் வடிவங்களன்றி, அவற்றின் கொச்சையான பேச்சு வடிவங்களல்ல. மேடை – வீட்டின் மேல்தளம் – எனல் வட்டார வழக்கு. மேடெ – அதன் கொச்சை வடிவம். முதலதே திசைச் சொல்.

## சேரி மொழி

*சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து*
*தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்*
*புலன் என மொழிப புலனுணர்ந் தோரே* – தொல்:1497

என்றமையான், சேரி மொழியான பேச்சுமொழி இலக்கியமும் உண்டெனத் தொல்காப்பியர் கூறுவதாக ஒருவாதம் உண்டு.

சேரி மொழி என்பதற்குத் 'தெரிந்தமொழி' – என்றும் பாடம் உண்டு. தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றல் என்பதற்கு ஏற்ற பாடம் அதுவே. அம்மை முதலான எட்டனையும் ஆராய்ந்தால், அம்மையாவது, சில சொற்களாலாகும் சிலவடிகளால் சுருங்க அமையும் சிறப்பியல்பு உடையது; அழகு என்பது. வழக்கிற் பயின்றுவராத செய்யுட்களில் மட்டுமே பயின்று வரும் அருஞ்சொற்களாலாவது: உரையிட்டமையும் சிறப்பியல்பு தொன்மையாகும்: இனிய ஓசையுடைய மொழிகளால் விழுமிய பொருளுணர்த்தலும்,

பொருட்செறிவான மொழிகளால் நிண்ட பாடலாயமைதலும் தோல் என்பதன் சிறப்பியல்களாகும். விருந்தாவது, மரபு வழிப்பட்ட உத்தியினின்றும் மாறிப் புது வகை உத்தியானமைவது: இயைபாவது, வல்லொற்றுச் சேர்ந்தமையும் சொற்களின்றி அமைவது. ஆனால், புலன் என்பது இவ்வாறாகும் சிறப்பியல்பு ஏதுமின்றி, எல்லார்க்கும் எளிதிற் பொருள் விளங்கும் இயற்சொற்களே கொண்டு கொடுக்கப்படுவதெனக் கொளலே மேற்கண்ட நூற்பாவுக்குரிய சரியான பொருளாகும்.

சேரி மொழியென்றே பாடம் கொளினும் , சேரி மொழியாவது பேச்சு மொழியெனக் கொள்ள இலக்கியச். சான்றின்மையானும், சேரி என்பது இடைக்காலம் வரையும் உயர்ந்தோர் உரையும் பகுதியாகவே கொள்ளப்பட்டமையானும் சேரி மொழியாவது கொச்சையான பேச்சு மொழி எனக் கொள்வது பொருந்தாது.

**இலக்கியங்களில் பேச்சு மொழி**

இருபதாம் நூற்றாண் இலக்கிய வாணரான பாவேந்தர் பாரதிதாசன்,

"நன்று மடமயிலே நான்பசியால் வாடுகின்றேன் குன்றுபோல் அன்னம் குவிந்திருக்கு தென்னெதிரில் உண்ண முடியாதே ஊராள்வோன் சுவர்வாளும் வண்ணமுடிச் செல்வாக்கும் வந்து மறிக்குதடி" எனப்பாடுகின்றார். இருக்கிறது. மறிக்கிறது என்பன இருக்குது, மறிக்குது எனப் பேச்சு வடிவில் வருகின்றன. ஆனால், இருக்குது என்பதையே தமது இலக்கிய வழக்காக எல்லா இடங்களிலும் ஆளவில்லை. இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே என்றே பாடுகின்றார்.

**வட்டார இலக்கியங்கள்**

பள்ளு, குறவஞ்சி முதலான இலக்கியங்கள் அவ்வக் குலத்தாரை மையப்படுத்தி எழுதப்பட்டனவாயினும், அவ்வப் பகுதி மக்களின் சூழலையும், ஒழுக்லாற்றையும் விவரிப்பனவாதலின் அவை அக்காலத்திய வட்டார நாவல்கள் எனத்தகுவன. ஆயின், முக்கூடற் பள்ளில்,

*"குச்சுக் குள்ளே பள்ளனையும்*
*வச்சுப் கொண்டதட் டாதேவாய்*
*தைச்சுப் போடுவேன் மருதாலூர்க்*
*கச்சக்காய்ப் பள்ளி"*

என்றாற் போலும் கொச்சை வழக்குகள் அருகியும், பள்ளத்தியர் தம்முள் ஏசிக் கொள்ளும் இடங்களிலும்,

*"வழக்கிட்டு வந்தேனோ*
*மருதூர்ப்பள்ளி - பள்ளம்*
*மாமன்மகள் என்றென்னை*
*மறித்துக் கொண்டான்*
*உழக்கிற் கிழக்கு மேற்கோ*
*முக்கூடற் பள்ளி - மறித்து*
*உன்னைக் கொண்டான்*
*என்னைக்கண் டென் ஊரிலே வந்தான்"*

என எழுத்து வழக்குகள் மிகுந்தும் வருதல் காண்க ஆக, தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் வெவ்வேறென்றாலும், எழுத்து வழக்கினும் செய்யுள் வழக்கு மேலும் திட்பமுடையதாகிறது.

**பட்டது போதாதா?**

பேச்சு மொழியை எழுத்து மொழியாக்குதல் தவறு என்பதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று. அது தகாது, மற்றொன்று அஃது இயலாது. கொச்சை வழக்குகளை எழுத்து வழக்காக்கி இலக்கண நெறிப்படுத்துவதாலாகும் சிதையும், அழிவும் நாம் அறியாதன வல்லவே?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அல | - | அலை | தெம்பு | - | தென்பு |
| கலக்கம்(ம்) | - | கலக்கம் | தெற | - | திற |
| குடிசெ | - | குடிசை | தொளெ | - | துளை |
| கொரடு | - | குறடு | தொன்னெ | - | தொன்னை |

இன்னோரன்ன கொச்சை வழக்குகள் இன்றளவும் தமிழகத்தின் அன்றாடப் பேச்சு வழக்கில் உள்ளவைதாம். இவை போல்வனவற்றை அப்படியே எழுத்து வழக்காக்கி இலக்கிய மொழியாக்கி, இலக்கணமெனும் அமைதிப்படுத்தியதால் தொல் பழந்தமிழகம் வட வேங்கடத்திற்கு அப்பால் மொழி பெயர் தேயமாக, தமிழ் கூறும் நல்லுலகம் இன்று தொல்காப்பியர் சுட்டிய வட வேங்கடத்தையும் இழந்து நிற்கிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளு | - | அழு | கதெ | - | கதை |
| கடலெ | - | கடலை | மனெ | - | மனை |
| கோளி | - | கோழி | தொருட | - | தொடை |
| அண்ணெ | - | அண்ணன் | மொள (ம்) | - | முழம் |
| ஊரு | - | ஊர் | முக்கா | - | முக்கால் |

என்றாற் போலும் பேச்சு வழக்குகள் இன்னும் நம்மிடை உள்ளவைதாம். இவை போல்வனவற்றை எழுத்து வழக்காக்கி, இலக்கிய மொழியாக்கி, இலக்கணங்கண்டதால் குட நாட்டுக் கொஞ்சு தமிழ் கன்னடமாகி நம்பால் நன்னய மற்றுக் காவிரியைத் தேய்பிறையாக்குகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஞ்சு | - | அய்ந்து | தேங்கா | - | தேங்காய் |
| கீழெ | - | கீழே | நாலு | - | நான்கு |
| தலெ | - | தலை | மஞ்ச | - | மஞ்சள் |
| தெக்கு | - | தெற்கு | மேலெ | - | மேலே |

இன்னோரன்ன சொல் பலவும் நாம் பேச்சில் பயிலாதனவல்ல. இவை போல்வனவற்றை எழுத்து, வழக்காய் இலக்கிய மொழியாய் இலக்கணப் படுத்தியதால் சேரமான் பெருமாள் நாயனாரின் நாவிலே அலை மோதிய அழகுத் தமிழ் மலையாளமாக மாறுபட்டு, "சொட்டு வெள்ளம் இல்லா" என நம்மை வெட்டிப் பிரிக்கிறது.

இவ்வாறாகத் தொல் பழந்தமிழ் களிதெலுங்காய், கன்னடமாய், கவின் மலையாளமாய், துளுவமாய், மற்றும் பலவாகப்பட்டுக் கெட்ட பின்னும் புத்தியிழத்தல் புலமையாகுமா? "மலையாளம் தனி மொழியாகக் கருதப்படும் பொழுது பேசும் தமிழும், எழுதும் தமிழும் தனித்தனி மொழிகள் என்றே

கருதப்பட வேண்டும்." - (இக்கால மொழியியல் - பக் : 210) என்பதும் மயக்கவுணர்வாகும். இன்றைய மலையாளிகள் பேச்சு மொழியின் எழுத்து வடிவங்களை ஒதுக்கி, நம்மைப் போல அவற்றின் திருத்தமான வடிவங்களையே எழுத்து மொழியாகக் கொண்டால் சிலப்பதிகாரம் நமக்கு மட்டுமல்ல, அவர்க்கும் சொந்தமாகும். மாறாக நாமுடம் அவர்களின் வழியை மேற்கொண்டால் சிலப்பதிகாரம் அவர்க்கு மட்டுமல்ல, நமக்கும் அயல் மொழியாகும். எது வேண்டும். சொல்க அறிஞர் பெருமக்காள்! இளங்கோவடிகள் பிறந்த சேர நன்னாட்டினர் பேச்சு வழக்கை எழுத்து வழக்காக்கியதால் அவர் தந்த சிலப்பதிகாரம் அவர் நாட்டினர்க்கு அயலாயிற்று. கவிமணி பிறந்த நாஞ்சில் நாட்டாரின் பேச்சு வழக்கை இலக்கிய மொழியாக்கினால் ஆசிய சோதி அவர்க்கு அயலாகும். ஈழத் தமிழரின் பேச்சு வழக்கையும், சென்னை நகர எளிய பிரிவினரின் பேச்சையும் இலக்கிய மொழிகளாக நெறிப்படுத்தினால் யாது விளையும்? ஈழம் என்றொரு மொழியும், மதராசிப்பாஷை எனறொரு மொழியும் உருவாகும்.

கொச்சை வழக்கு என்பது தமிழில் இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. தொடர் தோன்றிச் சொல் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூப்புடையது என்பதையே மேலே கண்ட தெலுங்கு, கன்டை, மலையாளச் சொற்கள் உணர்த்துகின்றன. கொச்சை வழக்கையே இலக்கிய வழக்காக்கி வடமொழிச் சொற்களையும் அளவிறந்து கொண்டமையால்தான் தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் உருவாயின. சோறுடைய சோழவள நாட்டாரும், முத்துடைய, பாண்டிய நாட்டாரும் பேச்ச் வழக்கை எழுத்து வழக்காக்காது, அயல் மொழிச் சொற்களை அளவுடன் கொண்டமையால் தான் தொல்காப்பியமும், சங்கப்பாடல்களும் தமிழுக்குச் செம்மொழித் தகுதிகளாக, நாஞ்சில் நாட்டாரும், தொண்டை மண்டலத்தாரும் ஈழமண்டலத்தாரும் அவற்றை உரிமை பாராட்டுபவர்களாக நீடித்தலாகின்றது.

## ஆகாத வேலை

இவ்வாறாகக் தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் ஒன்றாதல் தகாது என்பது ஒருபுறமிருக்க, அஃது இயலாத தென்பதும் ஒரு காரணமாகிறது. எழுத்து மொழிக்கு இலக்கணம் வகுத்து, அதன் படி வழி

வழியாய் மரபு போற்றி வழங்குதல் இயலக்கூடியது. பேச்சு மொழியை இலக்கணம் வகுத்தோ, அரசு சட்டம் இயற்றியோ நிலைப்படுத்துதல் இயலாது. பேச்சுமொழி தலைமுறை தோறும் மாறும் இயல்பினது. இன்றைய பேச்சு மொழியை எழுத்து மொழியாக்கினால் ஒரு சில தலை முறைகளில் அப்புதிய எழுத்து மொழியிலிருந்து வேறொரு பேச்சு மொழி உருவாகும். மொழியென்பது அடுத்தடுத்த தலை முறையர்க்குத் தொடர்பு கருவி என்பது மாறி, ஒரு காலகட்டத்தவர் எழுதி வைத்ததை அடுத்த காலகட்டத்தார் மொழி பெயர்புச் செய்ய நேரிடும். சங்கப்பாடல்களுக்கும் இன்றைய புலவர்களின் எழுத்து நடைக்கும் வேறுபாடு கூடுதலாயதற்குக் காரணம் இடைப்பட்ட காலத்திய கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட பெருந்தேக்க நிலையே.

கல்விப் பயிற்சியால் எழுத்து மொழிக்கும் பேச்சுமொழிக்கும் இடைப்படும் வேறுபாட்டைக் குறைக்கலாம். எழுத்து மொழியை ஒரு நிலைப்படுத்தலாம். ஆனால் பேச்சு மொழியையும், எழுத்து மொழியாக்கி, அதன் வழிப் பேச்சு மொழியை ஒரு நிலைப்படுத்துதல் எக்காலத்தும் இயலாத செயலாகும். இயலுமென்பார் மாந்த உளவியலறியா மனக் கோட்டமுடையாரென்க.

## எது முன்னேற்றம்?

கொச்சை வழக்கிற்காய்க் கச்சை கட்டுவோர், இன்னொன்றும் கூறுகின்றனர். "தாழ்த்தப்பட்டோரை உயர்த்துதற்கு, அவர்களில் ஒருவனாக ஒத்துக் கொள்ளப்படுதற்கு, அவர்களை மேலே கொண்டு வருதற்குச் சிறந்த முறையெனக் கண்டனர். அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. மொழி சமூகத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்கே என்று கருதி மயங்கினர். இந்த நிலையில் பேச்சு மொழியைக் கற்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. எனவே, எழுதப்பட்ட எழுதப் படுகிற மொழிக்குக் கொடுக்கிற அதே மதிப்பைப் பேச்சு மொழிக்கும் கொடுத்து அதனையும் ஆராய்ந்து அதற்கும் இலக்கணம் எழுத முற்பட்டனார். "(இக்கால மொழியியல் : பக் : 227) இஃது மொருமயக்கவியலாகும். கடந்த நூற்றாண்டு அரசியலில் ஆசியப் பேரொளியாகத் திகழ்ந்தபண்டித சவகர்லால் நேரு தன் வரலாற்று நூலில், இந்தியாவில் கோடானு கோடிமக்கள் வறுமைப் பிணியில் உழலுவதால்,

நாமும் நம்மைத் தரித்திர நாராயணர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் - என்பதாகக் காந்தியடிகள் கூறியது பற்றிக் கருத்தறிவிக்க முற்பட்டு தரித்த நாராயணர்களை மற்றவர் அளவுக்கு உயர்த்தலே சரியான சமத்துவமாகும். நாமும் தரித்திர நாராயணர்களாகி, அவ்வகையில் உருவாகும் சமத்துவம் சரியான - விரும்பத்தக்க சமத்துவமல்ல எனக் குறிப்பிடுகிறார்.

அவ்வாறே, கல்வி மறுக்கப்பட்ட மக்களுக்கும் கல்வியறிவூட்டி, அவர்தம் மொழித்திறத்தைச் செம்மைப்படுத்துதலே வளர்ச்சி நிலையாகும். அவர்தம் பேச்சு மொழியை எழுத்து மொழியாக்கி, அம் மொழி நிலையிலேயே அவர்களை நிலைப்படுத்துதல் சிரியான வளர்ச்சியாகாது.

## தாழ்வு மனப்பான்மை

இக்காலம், தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி கற்றலில் பேரார்வம் கொள்கின்றனர். எதற்காக? மேல் சாதிக்காரர்கள் படிக்கிறார்கள் என்பதற்காகவா? அப்படி நினைத்தல் தவறல்லவா? தொட்டனைத் தூறும் மணற் கேணிபோல் கற்றனைத் தூறும் அறிவு என்பதால் கற்கிறார்கள் எனக் கொளலே நேரிய எண்ணவோட்டமாகும். தாழ்த்தப்பட்ட மக்களும் நாளுக்கு நாள் தூய உணவுண்டு, தூய உடையுடுத்தி, தூய சூழலில் வாழ முற்படுகின்றனர். என்ன காரணம்? மேல் சாதிக்காரர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்பதற்காகவா? கற்கும் கல்வியறிவிற்கேற்ப, உணவும், உடையும், சூழலும் பேசும் முறைமையும் தூயமையாதல் மேல் சாதியர்க்கும் உரியதாகின்றது. பாட்டன், முப்பாட்டன் வழியினின்று விலகி, கல்விகற்றலையும், தூய உணவுண்டு, தூய உடையுடுத்தி, தூய சூழலில் வாழ்தலையும் அடிமை மனப்பான்மையாகக் கொள்ளாத போது, கற்கும் கல்விப் பயிற்சிக் கேற்பத் திருத்தமாகப் பேசுதலை மட்டும் அடிமை மனப்பான்மையாகக் கருதும் தாழ்வு மனப்பான்மை தேவையா? சரிதானா?

## பேச்சிலும் பொருளுண்டு

பேச்சு வழக்குச் சொற்களையும் ஆராயத்தான் வேண்டும். எப்படி? சோழவள நாட்டின் சிற்றூர்ப் பகுதிகளில் சென்ற தலை முறை வரை. நிராரா (ம்) எடப்பாலெ கஞ்சி - என்னும் சொல்வழக்குகள் நிலவின. அவற்றின் பொருள்

என்ன? உழவுத் தொழிலுடையார் வைகறைப்பொழுதில் வயலுக்குச் சென்றிடுவர். பின்னர் பொழுது புலரும் வேளையில் வீட்டிலிருந்து அவர்களுக்கு நிரார (ம்) கொண்டு செல்வர். அஃ தென்ன? முதல் நாளிரவு உண்டு முடித்த பின்னர், எஞ்சியிருக்கும் சோற்றில், சிறிது வடித்தகஞ்சி கலந்த வெந்நீரை ஊற்றிவைப்பர். மறு நாட்காலையில் அச்சோற்றைக் கலக்கிவிட்டு, அதன் பின்னர் அதன் நீரை வார்த் தெடுத்தால் அந்த நீர், சுவையான நீர் ஆகாரமாக அமையும். நீர் ஆகாரம் - நீராகாரம் - நிராரம் - நிரார(ம்) எனப் பேச்சுவடிவமாயிற்று.

நிராகாரம் கொண்டு சென்று அளித்தபின்னர், பொழுது புலர்ந்து பத்து நாழிகைப் போதில், அதாவது காலை பத்துமணியளவில் எளிய கஞ்சியுணவு கொண்டு செல்வர். அதன் பின்னர், நண்பகல் இரண்டு மணியளவில் அவரவர் நிலைக்கேற்ப வயிறார உண்ணத்தகும் உணவுண்பர். பத்துமணியளவில் உண்ணும் எளிய கஞ்சி 'எடப்பாலே கஞ்சி' - என்படும். கிராமய் பெண்கள் காலை பத்துமணியளவாம் நேரத்தை, "எடப்பாலே கஞ்சி கொண்டு போர நேரம்" - சென்றே குறிப்பிடுவரர். அஃதென் எடப்பாலெ கஞ்சி ? முதல் நாள் இரவு உண்ட உணவுக்கும், மறுநாள் நண்பகல் உணவுக்கும் இடைப்பட்ட பொழுதுக்குரிய, எளிய கஞ்சியுணவு என்னும் பொருளில் இட்ட 'இடைப்பால் கஞ்சி' - என்பதன் மரூவு வடிவமே எடப்பாலெ கஞ்சி. விடிகாலையில் பெட் காப்பி அருந்தி, காலைப் பொழுதில் பிரேக் பாஸ்ட் உணடு, நண்பகள் டின்னர் மிசையும் நாகரிகம் பண்டு தொட்டு தமிழர்க்கும் உண்டு என்பதையே நீராரமும், எடப்பாலெ கஞ்சியும் உணர்த்துகின்றன. இவ்வாறான சொற்களின் வழி அறியலாகும் வரலாற்று பண்பாட்டுக் குறிப்புக்களை வெளிப்படுத்துதல் வேண்டத் தகுவதே. குறிப்பிட்ட பகுதிக்குரிய மக்கள் வழக்காறும். பண்பாட்டுக் கூறுகளும் என்பதையே ஆய்வுப்பட்டத்தற்கான பொருளாகக் கொள்ளலாம். ஆனாலது கொண்டு, கொச்சை வடிவங்களை இலக்கிய வழக்காக்குதல் மொழி வளர்ச்சியுமாகாது; வேளாண் வளர்ச்சியுமாகாது; மொழித் தளர்ச்சியாகவே முடியும்.

## துன்பம் பெருக்கல்

எழுத்து மொழிக்கும் இலக்கணம்; பேச்சு மொழிக்கும் இலக்கணம் என்பதும் பிழையாகும். முன் கூறியாங்கு, எழுத்து மொழி நிலையானது;

மொழிப் பரப்பினர் எல்லார்க்கும் பொதுவானது. பேச்சு மொழி நிலையில்லாதது, மொழிப்பரப்பினரிடையே வேறுபடக் கூடியது. எழுத்து மொழிக்கு ஓர் இலக்கண நூல் போதும். அதுவே நீண்ட காலம் பயன்படும். காரணம் இலக்கியவாணர் மொழி மரபு போற்றும் இயல்பினராவர். ஆனால், பேச்சு மொழியின் வட்டாரவேறுபாடுகளுக் கேற்பப் பல இலக்கண நூல்கள் வேண்டும். அவையும் விரைவில் மாறுதலுக்குள்ளாகும். எனவே, இம்முறையில் ஒரு தமிழ் மாணவன் எழுத்து மொழி இலக்கணம் ஒன்றும், பேச்சு மொழிஇலக்கண நூல்கள் பலவுமாகக் கற்க வேண்டும், அந்நிலை நன்னிலையாகாது. மொழிவளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அந்நிலை தடைக்கல்லாகுமன்றிப் படிக்கல்லாகாது.

## பட்டது போதும்

எழுத்து மொழி எனு மொன்னறத் தொடர்ந்து வேறுபட்ட நிலையிலேயே பின்பற்றினால், மொழிப் பரப்பாளர் அனைவரும் தொடர்ந்து ஒரே மொழியாளராக விளங்குவர். காலந்தோறும், பகுதி தோறும் பேசுகிறபடியே எழுதுதல் என்பதைப் பின்பற்றினால் இன்றைய தமிழ் மொழியாளர் அடுத்த நூற்றாண்டில் வெவ்வேறு மொழியினமக்களாகப் பிளவுபட்டும் பகை கொள்வர் - இன்றைய கன்னடியர், மலையாளிகளைப் போல.

ஆக, இது காறும் கண்டவாற்றான், முத்தமிழாகும் செந்தமிழ், பேச்சு மொழி, எழுத்து மொழி, இலக்கிய மொழி என முத்தன்மை பெற்ற தென்பதும் அசையும், தளையும் எண்ணித் தொடுக்கப்படும் இலக்கிய மொழிக்கும், தளையேது மின்றி நசையுறு பான்மையிற் சொற்சிதைக்கும் பேச்சு மொழிக்கும் இடைவழியாய் இணைவழியாய்த் திருத்தமான பேச்சு வடிவான எழுத்து மொழியெனும் வழக்கே தொன் முதுதமிழை என்றுமுள தென்றமிழாக நிலைநிறுத்தும் என்பதும் தெளிக.

நல்லமாட்டுக்கு ஒரு சூடு. மூன்று முறை சூடுபட்ட பின்னரும் தமிழினத்திற்குப் புத்தி வர வேண்டாமா?

# திருவருட்பாவில் இலக்கிய வகைகள்

க. சாந்தி
அண்ணாமலை நகர்

## முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் முறையான பள்ளிக் கல்வியை கற்றவர் அல்லர். ஆயினும் பிற்காலத்து அருட்பா, இசைப்பாடல், அகவல் போன்ற பல இலக்கிய வகைகளைப் படைத்துள்ளார். வள்ளலார் தன் காலத்து அறிஞர்களின் நூல்கள், உபதேசங்கள் எனப் பலவற்றையும் உணர்ந்து தனது இலக்கியப் படைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளார்.

## வள்ளலாரின் இலக்கியப் புலமை

வள்ளலார் சென்னையில் உள்ள கந்தக்கோட்டம் எனுமிடத்தில் உறைந்துள்ள முருகக் கடவுள் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார்.

*"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற*
*உத்தமர் தன் உறவுவேண்டும்*
*உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்*
*உறவுகலவாமை வேண்டும்"* (முதல் திருமறை பா. 3)

என்ற பாடலில் மனித உணர்வுகள் இறைவனோடு ஒன்றுபட வேண்டிய தேவையை முன்னிறுத்திப் பாடுகிறார். இப்பாடல் தெய்வமணிமாலை எனும் பாடலாகத் தொகுக்கப்பட்டன. தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான "மாலை" எனும் இலக்கிய வடிவில் இப்பாடல்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"திருவருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவல்" என்னும் நூல் வள்ளலாரின் ஞானத்திற்கும், கவிச்செறிவுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இவை கவிதை இலக்கியங்களாகத் தொகுக்கப்பட்டன.

ஒவ்வொரு பாடலின் தலைப்பிலும் ஒரு சொல்லோ, தொடரோ, அடியோ தொடர்ந்து வரத்தொடுக்கும் "மகுடம்" எனும் இலக்கிய வகையிலும் இவரின் அருட்பாக்கள் அமைந்துள்ளன. இவர் அருட்பாவில் உள்ள 179 தலைப்புகளில் மகுடம் அமைத்து சிறப்புச் சேர்த்துள்ளார். சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சியில் உள்ள வரிகளின் மொத்த எண்ணிக்கை 782 தான். ஆனால், வள்ளலாரால் எழுதப்பட்ட இந்நூலோ மொத்தம் 1596 அடிகளைக் கொண்டு அருட்பெருஞ்ஜோதி அகவலாக திகழ்கிறது. அகவல் அருட்பாவின் சாரமாக விளங்குகிறது.

அகவலில் சிவனையும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனையும் அடிப்படையாக வைத்துப்பாடப்பட்ட பதிகங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. வள்ளலாரின் படைப்புகளில் அவர்தம் உயர்ந்த ஆன்மீக வெளிப்பாட்டை உணர முடிகிறது. எடுத்துக்காட்டாக,

*"சிவரக சியமெலாந் தெரிவித்தெனக்கே*
*நவநிலை காட்டிய ஞான சற்குருவே*
*அறிபவை யெல்லா மறிவித் தென்னுள்ளே*
*பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே"* (அகவல். பா. 1060)

எனப் பாடுகிறார்.

விண்ணப்ப கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், அருட்பெருஞ்ஜோதி அகவல் இம்மூன்றும் அருட்பாவில் உள்ள மிகப்பெரிய இயற்பாக்கள், அருட்பாவில் 33 மாலை எனும் சிற்றிலக்கியப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன என்பதால் கலிவெண்பா, நெஞ்சுவிடு தூது, மாலை, அகவல் போன்ற பல்வகை இலக்கிய மரபுகள் இவரால் படைக்கப்பட்டுள்ளமையை உணரமுடிகிறது. இவரது சற்குருமாலை, தெய்வ மணிமாலை, அனுபவ மாலை, அருள்விளக்க மாலை என்பன மாலை இலக்கிய வகைகளுக்கு சான்றுகளாய் திகழ்கின்றன. இதனை,

*"திரு ஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்*
*திறலோங்கு செல்வம் ஓங்கச்*

*செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்*
*திகழ்ந்தோங்க அருள் கொடுத்து"* (முதல்திருமுறை பா – 1)

என்ற பாடல் வரிகள் மூலம் உணரலாம்.

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சொல், சீர், அடி யாதானும் ஒன்று அடுத்த பாடலின் முதலில் வரும்படி அமைத்துப்பாடுவது அந்தாதி எனப்படும். வள்ளலார் அந்தாதித் தொடையில் நிறையப் பதிகங்கள் பாடியுள்ளார். ஆறாம் திருமுறைகளில் மொத்தம் 51 பதிகங்கள் அந்தாதித் தொடையில் அமைத்துப் பாடியுள்ளார். முதல்திருமுறை "மருண்மாலை விண்ணப்பம்" பதிகத்தை சான்றாகக் குறிப்பிடலாம்.

இருபது நூற்றாண்டுகளுக்கு மேல் செறிவாக இருந்து வந்த தமிழ்க் கவிதைக்குப் பலர் இனிமையும், நெகிழ்ச்சியும், தெளிவும் தந்து வளர்த்து வந்தனர். ஆனாலும், சென்ற நூற்றாண்டில் தமிழ்க்கவிதைக்குத் தெளிவும், எளிமையும், உருக்கமும் தந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை வள்ளலாருக்கு உரியதாகும்.

ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்ட திருவருட்பாவில் முதல் ஐந்து திருமுறைகள் புராண மரபுகளோடு தொடர்புடையனவாக உள்ளன. ஆறாம் திருமுறை அனுபவ வெளிப்பாடுகளாய் அமைகின்றன. அகப்பொருள் மரபில் அமைந்த பல பதிகங்களை இவற்றுள் காணமுடிகின்றது.

சமய இலக்கிய சான்றோர்களான தேவாரமூவர், மாணிக்கவாசகர், தாயுமானவர் போன்ற சான்றோர்களைப் பின்பற்றி பதிகம், உலா, கண்ணிகள், மாலை, விண்ணப்பம் முதலிய பலவகைப் பாக்களை இயற்றியுள்ளார். சமய இலக்கிய சான்றோர் தமிழிசையால் சைவ, வைணவத்தைப் பரப்பியது போலவே வள்ளலாரும் இசைப்பாடல்களால் தன் கொள்கையைப் பரப்பினார்.

இசைப்பாடல்கள் பக்தி இலக்கியத்திற்கு மிகுந்த பெருமையினை சேர்ப்பவையாகும். திருவருட்பா பாடல்கள் எல்லாமே வள்ளலாரால் பாடப்பட்டவை. இவை வெண்பா, விருத்தப்பா, அகவற்பா, கீர்த்தனைகள் என பல வகைகளில் தம் பாடல்களைப் படைத்துள்ளார். இயற்பா, இசைப்பா,

நாட்டியப்பா என மூவிதங்களும் அமைந்துள்ளமையால் அருட்பாவை முத்தமிழ் இயல்பு இலக்கியம் என்று கூறலாம் என்பர்.

நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்த கும்மிப்பாடலை கீர்த்தனை வடிவில் முதலில் தந்தவர் வள்ளலாரே ஆவார். இவை தவிர நாட்டுப்புற இலக்கிய வகைமை சார்ந்த பல கூறுகளை வள்ளலார் பயன்படுத்தியுள்ளார். கும்மி, சிந்து, கண்ணி, பந்தாடல், மருந்துப்பாட்டு, முதலிய நாட்டுப்புறச் சாயலுடைய இலக்கியத்தை வள்ளலாரின் படைப்புகளில் காணமுடிகிறது.

நாட்டுப்புற இசை மெட்டில் பல பாடல்கள் உள்ளன. இவரின் பாடல்கள் நாட்டுப்புற இசைக்கும் செவ்வியல் இசைக்கும் பாலமாகத் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக,

பந்தடிபாடல்

*"ஆடேடி பந்து ஆடேடிபந்து*
*ஆடேடி பந்து ஆடேடிபந்து"*

ஆடல் வல்லான் அழகில் தன்னை மறந்து பாடிய பாடல்

*"வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்*
*மயில் குயில் ஆச்சுதடி – அக்கச்சி*
*மயில் குயில் ஆச்சுதடி"*

நாட்டுப்புற பாடல் பாங்கையும், 26 வகைப்பட்ட யாப்பு வடிவங்களையும் வள்ளலார் பயன்படுத்தியுள்ளார்.

## இலக்கியத் தொண்டு

சென்ற நூற்றாண்டில் தமிழ்க்கவிதைக்கு தெளிவும், எளிமையும், உருக்கமும் தந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை வள்ளலாருக்கே உரியது என்று வள்ளலாரின் இலக்கிய பணிகளை மு.வ. குறிப்பிடுவார். இதற்கேற்பத் தாய்மொழியான தமிழ் மீது பற்றுக்கொண்ட வள்ளலார் தமிழ் நூல்கள் எழுதியும், சில நூல்களைப் பதிப்பித்தும் தமிழில்

கல்வெட்டாராய்ச்சி செய்தும் தமிழ் மொழியினை வளர்த்தார். வள்ளலார் சென்னையில் வாழ்ந்தபொழுதே மாணவர்களுக்கு நீதிநூல்களையும், இலக்கண, இலக்கியங்களையும் கற்பித்து வந்தார். கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு பாடி மகிழ்தற்கேற்பத் தம் பாடல்களில் சிந்து, கண்ணி, கீர்த்தனை, நாமாவளி போன்ற இசைக் கூறுகளைப் பயன்படுத்தியிருக்கின்றார்.

தாம் எழுதிய உரைநடை நூல்களான மனுமுறைகண்ட வாசகமும், ஜீவகாருண்ணிய ஒழுக்கமும் சமுதாயத்தில் பின்பற்றப்பட வேண்டிய உயர்ந்த செய்திகளை உள்ளடக்கியது. மனிதன் பின்பற்றப்பட வேண்டிய உயர்ந்த செய்திகளையும், கொலைதவிர்த்தலையும், உயிரின் மேன்மையும் வலியுறுத்துவதே மனுமுறைகண்ட வாசகமாகும். பெரிய புராணத்தில் மனுநீதி சோழன் கதை என்ற பகுதியே வள்ளலார் சமுதாயப் பண்புகளைப் புகுத்தி மனுமுறை கண்டவாசகமாக எழுதினார் எனலாம். வள்ளலார் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் மிக முக்கிய பங்காற்றியிருக்கிறார். வள்ளலாரின் தாய்மொழிப்பற்றும், அவர் படைத்த இலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கு சான்றாகக் கொள்ளலாம்.

## முடிவுரை

வள்ளலார் முறையான பள்ளிக் கல்வியைக் கற்கவில்லை. மிகுந்த கல்வி ஞானமும், வாசிப்புத் திறமும் உடையவர் என்பதால் அவருக்கு இலக்கியம் படைக்கும் படைப்பாற்றல் மிகுதியாக இருந்தது. இவர் இலக்கண, இலக்கிய வாசிப்புகளால், இலக்கியம் படைக்கும் திறமைப் பெற்றார். இதன்மூலம் அருட்பா, விண்ணப்பம், மாலை போன்ற இலக்கிய வகைகளை படைத்துள்ளமை புலப்படுகிறது. நாட்டுப்புற இலக்கிய வகை சார்ந்த பந்தாடல், கண்ணி, கும்மி, போன்ற இலக்கியங்களையும், உத்திகளையும் கையாண்டுள்ளார். வள்ளலாரின் இலக்கியங்கள் யாவும் உலக பொதுமை உடையன.

# திருவிளையாடற் புராணங்களில் இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில்

முனைவர் பி. ஆறுமுகம்
மதுரை

## முன்னுரை

தில்லை நடராசரையும் திருக்காளத்தி நாதனையும் பக்தியுடன் வழிபட்டால் முக்திபெறலாம். காசி விசுவநாதரைத் தரிசித்துக் காசியில் இறந்தாலும் முக்தி உண்டு என்பர். ஆனால், மதுரையில் எழுந்தருளியுள்ள நடுவூர் நாயகனின் நாமத்தைக் கேட்டாலே பிறவாப் பேரின்பம் அடையலாம் என்றும், இப்பிறவியிலேயே மறுமைக்குரிய நன்மைகள் பலவற்றை வாரி வழங்குவான் என்ற நம்பிக்கையும் அடியார்களுக்கு உண்டு. அதனால்தான் இவ்விறைவனுக்கு 'இம்மையிலும் நன்மை தருவார்' என்ற திருநாமம் சூட்டப்பட்டிருக்கிறது. மேலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களுடன் திகழும் மதுரைக்குச் 'ஜீவன் முக்திபுரம்' என்ற பெயர் இந்த இறைவனாலேயே வந்ததோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இத்திருத்தலம் பெரியார் பேருந்துநிலையம் அருகே அமைந்துள்ளது. சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானப் பரம்பரை அறங்காவலர், மேதகு இராணி து.ச.கா. மதுராந்தகி நாச்சியார் அவர்களின் சீரிய மேற்பார்வையில் செயல்பட்டுவருகிறது.

## தலப்பெருமை

பெரும்பாலான இந்து சமயக் கோயில்களில் இறைவன் கிழக்கு நோக்கியே எழுந்தருளியிருக்க இக்கோயிலில் இறைவன் மேற்கு நோக்கிய நிலையில் எழுந்தருளியுள்ளார். இத்திருத்தலம் காசிக்கு இணையானது. சிவனும் அவனது தேவியும் (மீனாட்சி சுந்தரேசுவர்) உடனமர்ந்து இலிங்க வழிபாடு செய்யும் திருத்தலமாகும் இது. எந்நாட்டவர்க்கும் இறைவனான சிவனே ஏற்படுத்திய திருத்தலம் இது எனலாம். இறைவன் கைலாசத்

திருக்கோலத்தில் எழுந்தருளி அருள்பாலிப்பது இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பு. மதுரையில் தச வில்வம் அமைந்த திருத்தலமும் இதுவே ஆகும். இத்திருக்கோயில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கும் முந்தையது என்பர். இத்திருக்கோயிலின் மூலவரின் அருகே சுமார் நான்கு யானைகள் நிற்கலாம் எனும் அளவிற்குப் பெரியது இதன் கருவறை. மதுரைக் கோயில்களில் இதைப் போன்றதொரு கருவறை வேறு எங்கும் இல்லை என்றே கூறலாம். இத்திருக்கோயிலின் பெருமையைப் பல புராணங்கள் புகழ்ந்து பேசுகின்றன. அவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயிலும் புராணங்களும்

சிவபெருமானின் முத்தொழில்களையும், வேதங்களிலுள்ள தர்ம விதிகளையும், கதைகள் மூலம் விரித்துக் கூறுவது புராணம் ஆகும். அதனால்தான் 'புராணத்தை வேதத்தின் பூதக்கண்ணாடி' என்கின்றனர். இந்தப் புராணம், 'தொன்மம், மான்மியம் என்றும், இந்த உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், பாரம்பரியமனு அந்தரங்கங்கள், பாரம்பரியக் கதைகள் ஆகிய ஐந்தையும் கூறுவதால், இதற்குப் பஞ்ச லக்கணம்' என்ற பெயருமுண்டு. தமிழில் பதினெண் புராணங்கள் உள்ளன. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் கல்லாடம், கடம்பவன புராணம், பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணம், பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணம், சுந்தரபாண்டியம் ஆகிய நூல்கள் விரித்துக் கூறுகின்றன. இவற்றுள் பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற்புராணமும் பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணமும் அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் பற்றிய செய்திகளை நன்கு பதிவு செய்துள்ளன.

## அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணமும்

திருவிளையாடற்புராணங்களில் காலத்தால் பழமையானது

பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணமாகும். இது 'வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணம்' எனவும் 'திருவாலவாயுடையார் கோயில் திருவிளையாடற்புராணம்' எனவும் அழைக்கப்படுகின்றது. இது 'உத்தரமகாபுராணம்' எனும் வடமொழி நூலின் ஒரு பகுதியான 'சாரசமுச்சயம்' என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். இந்நூல் ஒரு பாண்டிய அரசனின் வேண்டுகோளுக்கிணங்கச் செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரால் எழுதப்பெற்றது. சுவடியில் இருந்ததை நூலாகப் பதிப்பித்த பெருமை மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய சிவநெறிச் செல்வர் இராமநாதபுரம் பொ. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களைச் சாரும். இதற்குப் பெரிதும் உதவியவர் உ.வே. சாமிநாதையர் ஆவார். இது 1906ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றது. பாண்டிய மன்னனான கோமாறவர்மனுக்குச் 'சுந்தரமாறன்' என்ற பெயருமுண்டு. அவனே இவ்இறைவனுக்கு 'சுந்தரமாறன்' என்று பெயரிட்டான் என்றும் ஒரு செய்தி உண்டு. மேலும் மனம், மொழி, மெய் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவனாக விளங்கும் இறைவனுக்கு அர்ச்சனை புரிதலாகிய கடமையும் ஓர் அரசனுக்கு உண்டு என்பதால், தனக்கு உவமையில்லாது விளங்குகின்ற சிவலிங்கத்திற்கு, 'இம்மையிலும் நன்மை தருவார்' என்று பெயரிட்டு, ஆகமத்தில் கூறப்பட்டவாறு உலக மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் சுந்தரமாறன் இவ்விறைவனைப் பூசித்து அருளினான் என்ற செய்தியும் உண்டு. இதனை,

> *"பெருமையே தருங்கோவென்னும் பெயர் தன தாதலாலே*
> *குறைகட லுலகின்மிக்க கோமாற வருமனானான்*
> *சுருதிமூ வுலகுங் காக்குஞ் சுந்தர மாறனென்றே*
> *மருவிய வெழுத்துமிட்டான் வாய் மணத்துக்குமெட்டான்"*

> *"அருட்புனை நீதியோங்க வருச்சனை புரிதல்வென்றி*
> *யுருத்தகு மரசர்க்கென்று முரித்தன வுவமையில்லா*
> *விருக்கறை சிவலிங்கத்தை யிம்மையே தருவானென்றே*
> *யுரைத்தவா கமத்திற் பூசித் தருளின லுலகங்காண"*

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

இத்திருவிளையாடற்புராணத்தை ஆழ்ந்து நோக்கும் போது சுந்தரமாறன் என்ற ஓர் அரசன் வாழ்ந்தான் என்றும் அவனே இறைவனுக்குத் தனது பெயரான சுந்தரமாறன் என்ற திருப்பெயரையிட்டான் என்றும், அந்தச் சுந்தரமாறன் என்ற இறைவனே தனக்கு உவமையில்லாது இருக்கின்ற சிவலிங்கத்திற்கு இம்மையிலும் நன்மை தருவார் என்ற மற்றொரு திருப்பெயரையும் இட்டார் என்ற செய்தியும் கிடைக்கிறது. இதிலிருந்து பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணத்திற்கு முன்பே சிவலிங்கம் இருந்தது என்பதும், இம்மையிலும் நன்மை தருவாருக்குச் சுந்தரமாறன் என்ற திருப்பெயர் இருந்ததும் அந்தச் சுந்தரமாறன் என்ற இறைவனே இம்மையிலும் நன்மை தருவாரைப் பூசித்தான் என்ற செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. இத்திருக்கோயிலில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் அருள்மிகு மீனாட்சியும் சுந்தரேசுவரரும் அமர்ந்த நிலையில் பூசை செய்வது போன்ற உருவங்கள் அமைந்திருப்பது மேற்கூறிய செய்திகளுக்கு அரணாக அமைகின்றன. மேலும் சுந்தரபாண்டிய மன்னரையும் இம்மையிலும் நன்மை தருவாரையும் இணைத்தே இத்திருவிளையாடற்புராணம் கூறுகிறது. இதேபோல் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரரேசுவரர் திருக்கோயிலிலும் பள்ளியறைச் சொக்கன் எழுந்தருளியிருக்கின்ற வெள்ளிப்பல்லக்கு அம்மன் சன்னதியில் நுழைந்ததும் கட்டியம் கூறுவோர்,

*"தேவ தேவோத்தமா ! தேவதா சார்வ பௌமா !*
*அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகா !*
*பார்வதிப் பிரிய நாயகா !*
*கடம்பவன சுந்தாயச்சரீகா !*
*ஹாலாஸ்ய நாதா ! சர்வேஸ்வரா !*
*ஸ்ரீ சோமசுந்தரப் பாண்டி மகாராசா !*
*பராக்... பராக்..."*

என்று உரத்த குரலில் கட்டியம் கூறுவர். இதனால் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கும், அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயிலுக்கும், சுந்தரபாண்டியன் என்ற அரசனே திருப்பணி செய்திருக்கலாம் என எண்ணலாம்.

இனிப் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற்புராணம் எழுந்த காலம் பற்றியும் இம்மையில் நன்மை தருவார் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்த சுந்தர பாண்டிய மன்னன் பற்றி வழங்கும் செய்தி பற்றியும் இனிப் பேசலாம். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், அம்மன் சன்னதியில், மூன்று நிலைக் கோபுரம் ஒன்று அமைந்துள்ளது. இக்கோபுரம், கி.பி. 1227 – 28ஆம் ஆண்டு ஆனந்தத் தாண்டவநம்பி என்ற பத்தினியால் கட்டப்பட்டுள்ளது. "பெரும் பற்றப் புலியூர் நம்பி ஆனந்தத் தாண்டவநம்பியின் கணவராகவோ அல்லது சகோதரராகவோ அல்லது அவரின் குடும்பத்தில் ஒருவராகவோ இருந்திருக்க வேண்டும்" என்கிறார் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார். இவரின் கூற்றுப்படி இத்திருவிளையாடற்புராணம் எழுந்த காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனலாம். மது.ச.விமலானந்தமும் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் பாடினார் என்கிறார்.

பாண்டிய மன்னர்களின் தலைமுறையில், கி.பி. 13ஆம் நூற்றாண்டில் (1216 - 1238) பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆவான். இவன் சோழப்பேரரசின் கீழ்பணிந்து ஆண்ட பாண்டிய அரசர்களின் சிறுமை போக்கவந்த, சிறுத்தை என்ற சிறப்புக்குரியவன். இதற்கு, 1227ல் சோழரை வென்று, சோணாடு கொண்டு, முடிகொண்ட சோழபுரத்து, வீராபிசேகமும், விஜயாபிசேகமும், பண்ணியருளிய, சுந்தரபாண்டியன் என்ற விருதுப் பெயரிட்ட, கல்வெட்டைச் சான்றாகக் கொள்ளலாம். மேலும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், 1227ல் பாண்டிய நாட்டில், முடிசூட்டுவிழா நடத்தினான் என்று திருத்தங்கல் கல்வெட்டும் கூறுகிறது. இவன் சோழரை வென்ற கையோடு மலைமண்டலம் என அழைக்கப்பட்ட கேரள நாட்டையும் வென்றான் என்ற செய்தியும் வரலாற்றில் உண்டு. மேலும் இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் பொற்றாமரைக்குளக் கல்வெட்டும் ( வடக்குத் திசையில் மேலிருந்து கீழாக அமைந்துள்ள படிக்கட்டுகளில் 14வது படிக்கட்டு) மலைமண்டலம் என்ற கேரள நாட்டையும், கேரள சிற்ப ஆசாரி ஒருவரையும் பற்றி அறியமுடிகிறது. எனவே, கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பற்றப் புலியூர் நம்பியும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும் சமகாலத்தவர் எனத் துணியலாம்.

இம்மன்னனின் வேண்டுகோளின்படியே பெரும்பற்றப்புலியூர் நம்பி இத்திருவிளையாடற் புராணத்தை இயற்றினார் எனலாம். இம்மன்னன் பற்றி, மேலமாசி வீதியிலுள்ள இம்மையிலும் நன்மைதருவார் கோயிலில் திருப்பணிகள் செய்தான் என்று கி. பழநியப்பனாரும் கூறுகிறார்.

சிதம்பரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ளது போல் மதுரை மாவட்டத்திலும் பனையூர், புலியூர் ஆகிய ஊர்கள் அடுத்தடுத்து அமைந்துள்ளன. விருதுநகர் மாவட்டத்திலும் புலியூரான் கோட்டை என்ற ஊர் உள்ளது. மேலும் பெரும்பற்றப்புலியூர், திருப்பெரும்புலியூர் திருஓமாம் புலியூர் எனத் தமிழகத்தில் பல புலியூர்கள் உள்ளன. இதிலிருந்து புலியூர், பனையூர் ( திருப்பனந்தாள் ) ஆகிய ஊர்களுக்கும் சைவத்திற்கும் ஏதோ ஒருவகையில் நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல் தோன்றுகிறது. மேலும், மதுரை அருகேயுள்ள வேம்பத்தூருக்குப் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயரும் உண்டு எனத் தெரிகிறது. இச்செய்திகள் ஊர்ப் பெயராய்வு மற்றும் சைவ சமயம் பற்றிய ஆய்வு மேற்கொள்வோருக்குத் துணைபுரியும்.

## அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவாரும் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணமும்

பரஞ்சோதியார், தஞ்சை மாவட்டத்தில், திருமறைக்காடு என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் மீனாட்சிசுந்தர தேசிகர் என்பருவக்கு மகனாகத் தோன்றினார். இவர் ஒரு சைவ சமயத் துறவியாவார். இவர் பல சிவத்தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதுபோல மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கும் வந்து ஒரு இடத்தில் தங்கினார். அன்றிரவு அன்னை மீனாட்சி அவரது கனவில் தோன்றி, சிவபெருமான் மதுரையில் புரிந்த 64 திருவிளையாட்ல்களையும் பாடும்படிக் கூறி மறைந்தருளினார். அன்னை மீனாட்சியின் வாக்கிற்கிணங்க பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். அதை ஆலவாய் அண்ணல் முன்பு பல அறிஞர்கள் அடங்கிய அவையில் அரங்கேற்றம் செய்தார். இந்நூல் ஹாலாஸ்ய மகாமித்யமென்னும் வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்த்துச்

செய்யுள் நடையாக எழுதப்பெற்றது. 64 படலங்களையும் மூன்று பிரிவுகளையும் கொண்டது. 1 முதல் 18 படலங்கள் மதுரைக் காண்டம் என்றும், 19 முதல் 48 படலங்கள் கூடற்காண்டம் என்றும், 49 முதல் 64 படலங்கள் திருவாலவாய்க்காண்டம் எனவும் வழங்கப் பெறும். இந்நூல் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பெருங்காப்பியப் பண்புடையது. பல சித்தாந்தக் கருத்துக்கள், பல இசைக்குறிப்புகள், பலவகை அணிகலன்களின் பெயர்கள், வைகையின் வனப்பு, சோதிடக் குறிப்பு, குதிரையின் இலக்கணம் போன்ற செய்திகள் இந்நூலில் கொட்டிக் கிடக்கின்றன. இந்நூல் பாண்டியர் வரலாற்றை அறியத் துணைபுரிகின்றது. இந்நூலைச் சிவஞானமுனிவர் தமது படுக்கையில் எப்போதும் வைத்திருப்பார் என்றும் சொல்லப்படுகிறது. திருவிளையாடற்புராணங்களில் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணமே எளிமையாகவும், தெளிவாகவும் மக்களிடம் மிகுந்த செல்வாக்கும் பெற்றது என்பர். இதில் திருமணப் படலத்தில் உலகத்தைக் காவல் பூண்ட வேந்தர்கள் சிவபெருமானைப் பூசிப்பது வேதநெறி என்று தான் திருவாய் மலர்ந்தருளியதை, அரசனை வரும் துணிந்து மேற்கொள்ளுதற் பொருட்டுப் பாண்டியர் திருக்கோலங் கொண்ட இறைவனும் அந்நகரில் நடுவூர் என்று ஒரு அழகிய நகரை மேம்பட ஆக்கினான். உண்மை நூலின் நெறிப்படியே திருக்கோயிலெடுத்து அருள் வடிவாகிய சிவலிங்கத்தை நிலைபெறுத்தி இம்மையே பேறுதரும் இறைவன் என்று திருப்பெயர் இட்டு, முறைப்படி பூசனை புரிந்து கடம்பவனத்தில் உரைகின்ற சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் வணங்கி உலகமுற்றும் தனது செங்கோலை நடத்தியருளுவான்.

தாமரை மலரில் வசிக்கும் பிரம்மன், திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களும் மற்ற அனைவரும் தன்னையே வழிபட்டு இம்மை மறுமைப் பலன்களை அடையுமாறு அருள்புரிந்து நின்ற மூவருக்கும் மேலான முக்கண்ணனாகிய இறைவனே பூசைசெய்து வழிபட்ட நிலைபெற்ற தாவர லிங்கத்தின் சிறப்புத் தன்மையை அளந்து கூற வல்லார் யார் (ஒருவருமில்லை என்றபடி) என்று இம்மையிலும் நன்மை தருவாரின் புகழைப் பரஞ்சோதியார் புராணம் பறை சாற்றுகிறது. இதனை,

*"தென்னவர் வடிவங்கொண்ட சிவபரன் உலகங்காக்கும்*
*மன்னவர் சிவனைப்பூசை செய்வது மறையா றென்று*
*சொன்னது மன்னரெல்லாந் துணிவுரு பொருட்டுத்தானும்*
*அங்ஙவர் கடவூர் ரென்றோர் அலிங்கர் சிறப்பைக் கண்டான்"*

*"மெய்ம்மைநூல் வழியே கோயில் விதித் தருட்குறி நிறீ இப்பேர்*
*இம்மையே நன்மை நல்கும் இறைவனை நிறுவிப்பூசை*
*செம்மையாற் செய்துஙீப வளைத்துறை சிவனைக் காலம்*
*மும்மையுந் தொழுது வைய முழுதுங் கோல் நடாத்தும்"*

*"பூவரு மயன்மா லாதிப் புனிதரு முனிவ ரேனோர்*
*யாவருந் தனையே பூசித் திகம்பர மடைய நின்ற*
*மூவருள் மேலாம் முக்கண் மூர்த்தியே பூசை செய்த*
*தாவர இலிங்க மேன்மைத் தகுதியா ரளக்க வல்லார்"*

என்ற பாடல் வரிகளால் அறியலாம். பத்திரம் எழுதுவோர் தாவர, சங்கம சொத்துக்கள் என்ற வாசகங்களைப் பயன்படுத்தவர். இதில் தாவர என்றால் அசையாத சொத்துக்கள் எனப்படும். சங்கம என்றால் அசையக் கூடியன என்ற பொருளாகும். இதேபோல் லிங்கங்களிலும், தாவரலிங்கம் (அசையாத ஆத்மார்த்தலிங்கம் ) சங்கமலிங்கம் ( அசையக்கூடியன. இவற்றை ஆதீனகர்த்தர்க்கள் உடலில் அணிகலன்களாக அணிவர் ) எனப் பல வகைகள் உண்டு. இவற்றில் இம்மையிலும் நன்மை தருவார் என்ற இலிங்கம் ஆத்மார்த்த தாவரலிங்கம் ஆகும் என்கிறார் பரஞ்சோதியார்.

## பரஞ்சோதியாரும் மாணிக்கவாசகரும்

சிவன் கோயில்களில், நிகழ்ச்சித் தொடக்கத்திலும், பூசைத் தொடக்கத்திலும், தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற வாசகங்களை உரத்த குரலில் கூறித் தொடங்குவர். இவ்வரிகள் மாணிக்கவாசகரின் போற்றித் திரு அகவலில் உள்ளது.

பரஞ்சோதியாரின் புராணத்தில் அமைந்துள்ள தென்னவர் என்ற வரி மேற்கூறிய தென்னாடுடைய சிவனே போற்றி என்ற மாணிக்கவாசகரின் வரிகளிலிருந்து பிறந்திருக்க வேண்டும். மேலும், மூவருள் மேலாம் முக்கண் மூர்த்தியே என்ற தொடரும் மாணிக்கவாசகரின் மூவர் கோனாய் நின்ற முதல்வன் என்ற தொடரிலிருந்தே பிறந்திருக்க வேண்டும். எனவே, மாணிக்கவாசகரின் சைவ நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தவராகவோ அல்லது அழுது அழுது ஆண்டவனின் அருள்பெற்ற மாணிக்கவாசகரின் பக்திப் படைப்புக்களில் திளைத்தவராகவோ பரஞ்சோதியார் திகழ்ந்திருக்க வேண்டும். கல்லாடமும் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணமும் சாரசமுச்சயம் என்ற வடநூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்பர். இதிலிருந்து இந்தியாவின் வடக்கிலும் சிவ வழிபாடு உண்டு எனலாம். எனவே, சிவனை வடக்கிலிருந்து தென்னாட்டிற்குப் பிரிக்கும் உளவியல் உத்தி பரஞ்சோதியாரிடமும் மாணிக்கவாகரிடமும் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

## முடிவுரை

தடாதகை என்ற மீனாட்சி மலையத்துவச பாண்டிய மன்னனின் திருமகள். தடாதகைக்கு மூன்று தனங்கள் ( மார்பகங்கள் ) இருந்தன. அதுகண்டு தாய் காஞ்சனமாலை கவலை கொள்கிறாள். காஞ்சனமாலையின் கவலை தீரும் வகையில் சிவபெருமான் தடாதகை முன் தோன்ற முத்தனங்களில் ஒன்று மறைகிறது. பின்பு சிவபெருமான் தடாதகை திருமணம் நடைபெறுகிறது. திருமணத்திற்குப் பின் சிவபூசை செய்யச் சிவன் நடுவூரை உண்டாக்கி அங்கே ஒரு இலிங்கத்தையும் உண்டாக்கிப் பூசை செய்கிறார். அவர் பூசித்த இலிங்கத்திற்கு இம்மையிலும் நன்மை தருவார் என்ற திருநாமத்தை இடுகிறார் என்பது புராணக் கருத்து. இத்திருக்கோயில் இறைவிக்கு நடுவூர் நாயகி என்ற திருநாமமும் உண்டு. இப்புராண அடிப்படையில் சமயச் சான்றோர்கள் இத்திருக்கோயிலை எழுப்பியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

கல்லாடத்தில் சிவன் 'மதிக்குலம்' வாய்த்த பாண்டிய மன்னனாகப் பேசப்படுகிறான். பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணத்தில் சிவன் 'சுந்தரமாறன்' ( சுந்தரபாண்டியன் ) எனப்படுகிறான். ஆனால், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் மட்டுமே சிவன் 'தென்னவர்' என்று பேசப்படுகிறான்.

இத்திருக்கோயில் இறைவனுக்குரிய 'சுந்தரமாறன்' என்ற திருப்பெயர் வழக்கிழந்து தற்போது 'இம்மையிலும் நன்மை தருவார்' என்ற திருப்பெயரே வழங்கி வருகிறது. 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்பது பெரியாழ்வார் வாக்கு. அரசனின் அரண்மனைக்கு 'கோயில்' என்ற வழக்கும் உண்டு. 'வாயில் வந்து கோயில் காட்ட' என்கிறது சிலப்பதிகாரம். இதற்கேற்ப அரசர்கள் பெயரில் கோயில் எழுப்புவதும், அரசன் பெயரைத் தெய்வத்திற்குச் சூட்டுவதும், புராணச் செய்திகளைக் கருவாகக் கொண்டு திருக்கோயில்கள் எழுப்பப்படுவதும் மரபு என்பதைப் புராணங்கள் வாயிலாக உணரலாம்.

கல்லாடத்தில் சிவன் 'அருட்குறி' நிறுத்தி அர்ச்சனை செய்தான் என்ற செய்தியும், பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணத்தில், 'அருட்புனை நீதி ஓங்க சிவன் அர்ச்சனை' செய்தான் என்றும், பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தில் 'இம்மையே நன்மை நல்கும் இறையென' லிங்கத்திற்குப் பெயர் வைத்துச் சிவன் அதற்குப் பூசை செய்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இம்மூன்றும் 'இம்மையிலும் நன்மை தருவார்' என்ற இறைவனைச் சிவன் பூசை செய்தான் என்றே கூறுகின்றன என்பது தெளிவு என்பதைக் கூறி இக்கட்டுரையினை நிறைவு செய்யலாம்.

# தேவாரத்தில் உதவிமாணிகுழித் தொடர் ஓர் ஆய்வு

*தருமையாதீனப் புலவர் தா. குருசாமி தேசிகர்*
மதுரை

திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் பெற்ற, 'திருமாணிகுழி' நடுநாட்டுத் தலங்களில் ஒன்று. மற்றைத் தலங்களை திருமுறையாசிரியர்கள் ஊரையும் கோயிலையும் சிறப்பித்துப் பாடுவது வழக்கம். எடுத்துக்காட்டாக பெரும்புலியூர், ஓமமாம்புலியூர்வடதளி, கூடல்ஆலவாய் என்பன போன்றவை அல்லாமல், திருஞானசம்பந்தரின் திருமாணிகுழித் தலப்பதிகம் முழுவதும், 'உதவிமாணிகுழி அதுவே' என்று அருளிச் செய்வார். இத்தொடருக்கு உரை வகுத்த தருமையாதீன உரைகாரர், 'இதன் காரணம் விசாரித்து அறியத்தக்கது', என்பார். நாமும் இதனை விசாரித்து ஆராய்வோம்.

## உதவியின் விளக்கம்

திருஞானசம்பந்தர் திருமாணிகுழிப் பதிகத்தில், மாவலிச்சக்கரவர்த்தி செய்த, மங்கல வேள்வியில், திருமால் குள்ளவடிவம் கொண்டு, மண்ணிரந்த செய்கை குறிப்பிடப்படுகின்றது. அது,

*"நித்தம் நியமத்தொழிலனாகி நெடுமால்*
*குறளாகி மிகவும்*
*சித்தம தொருக்கி வழிபாடுசெய்*
*சிவலோகனிடமாம்"*

என்ற திருவாக்கை, சேக்கிழாரும் வழிமொழிந்து விவரிப்பார்.

*"போர்வலித்தோள் மாவலிதன்*
*மங்கல வேள்வியிற் பண்டு*
*வாமனனாய் மண்ணிரந்த செங்கணவன்*
*வழிபட்ட திருமாணிகுழியணைந்தார்"* என்பார்.

பதிகத் தொடரின் கதையைப் பெரியபுராணம் நன்றாக விளக்கம் செய்கிறது.

பதிகத்தில் தொடர்ந்து 'உதவி' என்ற அடைமொழி மாணிகுழியில் முடிவதால், சிவத்தின் அருளைப் பெற திருமால் பூசித்த தலம் என்று பொருள்தரும். உதவியைப் பெற்ற திருமாணிகுழி என்று இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாக அமையும்.

## மாணிகுழியின் விளக்கம்

மாணி என்பது மாண்பைச் செய்து கொள்பவன் என்று பொருள்தரும். மாண்பு என்ற சொல், நற்குண நற்செய்கையைக் குறிக்கும். இம்மாணி என்ற சொல், திருமுறையில் சண்டேசுரருக்கும், திருமாலுக்கும் மட்டும் வழங்கப்படுகின்றது. குழி என்பது பிரம்மன் பூசித்து, அருள் பெற்ற பிரமபுரம் போலவே, திருமால் சிவபெருமானைப் பூசித்து அருள் பெற்றதைக் குறிக்கும்.

திருமால் கொண்ட வாமன அவதாரம், இம்மாணிக்குழித் தலத்தில் விளக்கம் பெறுகிறது. குழி என்பது கோயிலுக்கு ஆகிவந்த இடவாகு பெயர். திருஞானசம்பந்தர், 'கழியுளார்' எனவும், சுழியுளார் எனவும் சிவன் எழுந்தருளிய தலங்களை அடையாளம் காட்டுவார். அது போல குழி என்பது இனஞ்செப்பலாகக் கொள்ளலாம். பள்ளம், பள்ளி, குழி முதலிய சொற்கள் மலையாளத்தில் இன்றும் கோயிலைக் குறிப்பனவாக உள்ளன. திருப்புட்குழி என்ற தலமும் தமிழ்நாட்டில் உள்ளது.

## திருமால் பெற்ற உதவி விளக்கம்

திருமால் வாமன அவதாரம் எடுத்து, தேவர்களுக்கு, பயன் தூக்காமல் செய்த உதவி . கைமாறு கருதாத உதவியாகவும் கொள்ளலாம். இவ்விருவர் வரலாறும், வேதபுராணங்களில் விரிவாக சொல்லப்படுகின்றன. எனிலும், வரலாற்றின் முக்கியப் பகுதியே நமது ஆய்வுக்குரியது. இவ்விருவர் செய்த உதவியையும், திருவள்ளுவர் கோட்பாட்டின்படி ஆராய்தால் உண்மை தெரியவரும்.

*உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து*

என்ற குறள் வழிநின்று, திருமாலையும் மாவலி மன்னனையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். உதவி மூன்று வகை என்பர். ஒன்று காரணம் கருதியது

மற்றொன்று பொருளால் உதவுவது. மூன்றாவது காலத்தில் உதவுவது. இவ்வுதவிக்கு அளவுகோல் எது? உதவி செய்வித்துக் கொண்டவர், 'சால்பு' எவ்வளவு பெரிதோ, உதவியும் அவ்வளவு பெரிது என்பது முடிவாகும். காரணத்தோடும், பொருள், காலத்தோடும் அமையாத செய்யாமல் செய்த உதவிக்கு, அதனை அறிந்தவர்க்குச் செய்த உதவி பெரிதாகும் என்பது குறள்வழி நின்ற செய்திகளாகும்.

## உதவிமாணிகுழி உணர்த்துவது

ஆளுடைய பிள்ளையாரால் உணர்த்தப்படும் உதவிமாணிகுழித் தொடர் மகாபாரதத்தில் கூறப்படும், திருமாலின் பத்து அவதாரங்களில், வாமனா அவதாரத்தைக் குறிப்பதாகும். இச்செய்தியையே திருஞானசம்பந்தரின் திருமுறைத் தொடர் விளக்கம் செய்கிறது. வேதாகம புராண இதிகாசச் செய்திகளை சிவபரமாக உணர்த்துவதில், திருமுறையாசிரியர்களின் பங்களிப்பு வியப்பைத் தருவனவாகும். இருக்கு வேதத்தில் உள்ள, மகாவிஷ்ணுவின், வியாபகத்தன்மை, பற்றிய கருத்து வாமன அவதாரம் தொடர்பான கதைகளுக்கு ஆதாரமாகியது என்றும், விஷ்ணு மூவடிகளால் உலகனைத்தையும் அளந்தமை பற்றி, வேதப்பாடல் குறிப்பிடுகிறது என்றும், முனைவர் சி. பத்மநாபன், இந்து கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடுவார் பக். 26.

## தன்குறி வழக்கம்

அக்கினிபுராணம், பாகவத புராணங்கள், மாவலிச் சக்கரவர்த்தியின் பேராற்றலைப் புலப்படுத்தும். அவ்வாற்றலின் வலிமை தேவர்களை வருத்தியதாகவும், அவ்வருத்தம் தீர திருமால் காசிபமுனிவரின் பிள்ளையாக வாமன அவதாரம் செய்ததாகவும், வேதக்கருத்துக்களை வழிமொழிந்து விளக்கம் செய்யும். இப்புராணங்களிலும், இருக்கு வேதத்திலும், திருமால் சிவபூசகர் என்ற செய்தி தெரிவதாயில்லை. திருமுறை ஆசிரியர்கள், வழக்கம் சிவநெறி சேராத, ஆற்றல்மிக்க மன்னர்களையோ, அல்லது முனிவர்களையோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், பதிவு செய்து புகழ்வதில்லை. சிவநெறி புரந்தவர்களையும், சிவபூசை மேற்கொண்டவர்களையும், தவறாமல் குறிப்பிடுவதை, திருமறை ஆசிரியர்கள் தன்குறி வழக்கமாகக் கொண்டனர். இதனைத் திருமுறை ஆசிரியர்களின் திருவாக்குகள் மூலமாக உணரலாம்.

## வாமனர் - மாவலியார் வாழ்வியற் படிப்பினைகள்

வாமனர் குறளாய் - குள்ளவடிவமாய்ச் சென்று, மூன்றடி மண்தருமாறு மாவலி மன்னனிடம் கேட்டார். மாவலிப் பெருவள்ளல் அவனுடைய குரு சுக்கிராச்சாரியார் தடுத்தும், வந்திருப்பவர் திருமால் என்றும், கேட்ட வரத்தைக் கொடுக்கக் கூடாது என்றும், செவியறிவுறுத்தியும், அதனை மீறி வாமனர் கேட்டதை மாவலி வழங்கினான். திருமால் திருவிக்ரம அவதாரம் எடுத்து, ஊன்றியபாதம் பூமியை நிறைவித்தது. தூக்கிய பாதம் விண்ணை நிறைவித்தது. மாவலி அஞ்சி அடங்கி வியந்து வழிபட்டான். மூன்றாவது அடியைத் தன்தலை மேல் வைக்குமாறு, மாவலி வேண்டி அப்படியே வாமனரும் அருளிப்பாடு செய்தார். மாவலி செய்த உதவியால் திருமாலே வியந்து, மாவலியை சிரஞ்சீவிகளில் ஒருவராக்கி பதமுத்தி தந்தார். இவ்வரலாற்றின் படிப்பினைகள் இரண்டு. ஒன்று திருமால் பயன்கருதிச் செய்தது, மாவலி பயன்கருதாமல் செய்தது. இம்மறைவான செய்தியை வெளிப்படுத்தியவர் திருஞானசம்பந்தர். இதனையே அருணகிரியார் 'காமியத்து அழுந்தி இளையாதே' என்றும், 'புகலியில் வித்தகர் போல அமிர்தகவித் தொடைபாட அருள வேண்டும்' என்றும் அருளிச் செய்வார்.

## செய்திகள்

1. வாமனர், தேவர்களுக்கு உதவி செய்தது காரணம் பற்றியது.

2. மாவலி முன்னைப்பிறப்பில் எலியாக இருந்து, சிவாலயத்து விளக்கு அணையும் தருணத்தில் நெய்யுண்ணும் போது, அதன் மூக்கு முட்டி, திரி நீண்டு எரிந்தது. சிவன் வெளிப்பட்டு அடுத்த பிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாக்கினார். இது அப்பர் அருளிய செய்தியாகும். அச் செய்தியில் அபுத்திபூர்வமாக் எலி, விளக்கு எரியச் செய்த செயலைப் போல, மாவலியாகப் பிறந்த பின்னும் பயன் கருதாமல் உதவி செய்த செயல் வெளிப்படுகின்றது. இதுவும் முன்வினையே போலும்.

3. பயன் கருதாமல், மாவலி பேரரசனாக இருந்தும், திருமாலைத் தெய்வமாகக் கருதி, அஞ்சி அடங்கி வழிபட்ட உணர்வை மதித்து திருமாலும், மூவகை உதவியை காலத்தோடு செய்து முடித்தார். அதுவே சிரஞ்சீவி பதம். சைவத்தில் அடிசேர் ஞானம் என்பர்.

4. உதவி செய்தவர் என்ற தொடர், செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை என்ற தாண்டக வரியை நினைப்பிக்கும். அவ்வுதவியை மாவலிக்குச் செய்தவர் திருமாலாவார். ஆகவே உதவிமாணிகுழி என்பது, இப்பொருள் நயத்திற்கும் உரியதாகிறது.

5. மாவலிச் சக்கரவர்த்தியின் சால்பு (குருவார்த்தை கேளாமை) திருமாலின் திருவுளத்தை பிணித்தது, அழிப்பிலும் ஆக்கம் செய்தார். அதுவே சிரஞ்சீவிப் பதம். திருமால் அழிப்பில் ணணஅழிப்புதான் நிகழுமே தவிர, அரனார்போல் அழிப்பில் ஆக்கம் விளைவதில்லை. ஆக்கம் விளைந்ததும் உதவிதானே.

6. பயன்கருதாது, மூன்றடி மண் கொடுத்த மாவலிக்கு இவ்வுலகவாழ்வை நிறைவுபெறச் செய்தார் திருமால். அப்பாவம் தீர, திருமால் சிவனைப் பூசித்து இத்தலத்தில் அருள் பெற்றார். ஆகவேதான் உதவிதிருமாணிகுழி எனப்பட்டது.

7. சிவபெருமான் உதவியைப் பெற்ற மாணி வழிபட்டு, மாவலிக்குச் செய்த அபகாரத்தையும், பாவத்தையும் போக்கிக் கொண்டார். இதற்கு திருநாவுக்கரசரின், 'தேடிமால்' செய்த கோயில் திருவிராமேச்சுரத்தை 'நாடிவாழ்' என்ற தேவாரத் தொடர் இந்த மாணிகுழிக்கும் உதவியாகப் பெறப்படும்.

## கந்தபுராணத்துள் உதவி

தன்னால் முடியக் கூடிய உதவியை, ஒருவன் தானே முடித்தல் தலையானது. சொல்லி முடிப்பது இடைத்தரமானது. சொன்னாலும் பலமுறை மறுத்து பின்பு முடிப்பது கடையானது என்பார் கச்சியப்பர்.

*என்னானும் ஓர்உதவி யாதொருவன் யார்க்கெனினும்*

*தன்னால் முடிவதெனில் தானேமுடித்தல் தலை*

*சொன்னால் முடித்தல் இடையாகும் சொல்லுகினும்*

*பன்னாள் மறுத்துப்புரிதல் கடைப் பான்மையதே*

என்ற கருத்து மாவலி தன்னால் முடிந்த உதவியை வழங்கி, ஆசிரியர் தடுத்தும் தலையானவன் ஆனான். தலையானவனின் பயன்தூக்காத உதவியைப் பெற்ற திருமால், தேவர்களுக்குப் பயன்கருதி உதவினார்.

## நிறைவுரை

சிவபெருமானின் முழுஉதவியும் அருளும் பெற்ற மாவலிக்கு திருமால் செய்த மறக்கருணையால், அப்பாவம் தீர சிவனை வழிபடப் பெற்ற செயல்களையெல்லாம் உள்ளடக்கி, உதவி என்பதை முதல்நிலைத் தீவகமாக்கி திருஞானசம்பந்தர் நயம்பட மாவலிக்கும் இவ்வுதவி சென்று சேருமாறு திருமாணிகுழிப் பதிகத் தொடர் நினைவுறுத்துகிறது. திருவள்ளுவமாலை பாடிய பரணர், திருக்குறளை வாமனனுக்கு ஒப்பிடுகிறார். திருமாலும் குறளாய்ப் பிறந்தார். இரண்டு பெரிய அடிகளால் உலகத்தையும் அளந்தார். திருவள்ளுவரும் இரண்டு அடிகளை உடைய குறள் வெண்பாக்களால், உலகமனைத்தும் உள்ளோரின் நினைவுகளை ஆராய்ந்து அளந்தார்.

*மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்*
*ஞாலம் முழுவதும் நயந்தளந்தான் – வாலறிவின்*
*வள்ளுவரும் தங்குறள்வெண்பாவடியால் வையத்தார்*
*உள்ளுவவெல்லாமளந்தார் ஓர்ந்து*

இதனால் திருஞானசம்பந்தர் திருவாக்கு சேக்கிழார் வாக்கால் விரிவு பெறுகிறது. எனிலும் திருஞானசம்பந்தர் உதவிமாணிகுழி என்ற தொடர் மூலமாக சிவபெருமானைப் பூசித்த சிந்தனையே, ஈண்டு வெளிப்படுகிறது என்று நாமும் திருமாலைப் போல் சிவனைப் போற்றி வணங்குவோமாக.

# பட்டடை

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

*சீரிடம் காணின் எரிதற்குப் பட்டடை*
*நேரா நிரந்தவர் நட்பு.* குறள் 821

இக்குறட்பா கூடா நட்பு என்ற அதிகாரத்தில் அமைந்துள்ளது. இக்குறட்பாவில் உள்ள பட்டடை என்ற சொல் இக்குறட்பாவைத் தவிர வேறு எந்தக் குறட்பாவிலும் இல்லை. இக்குறட்பாவில் உள்ள எரிதற்குப் பட்டடை என்ற தொடரை மட்டும் நுணுகியறிவோம்.

பட்டடை என்ற சொல்லுக்கு அடைகல், பணை, வெட்டிரும்பு, வெட்டுதற்கு அடியில் வைக்கும் அட்டை, கொத்துக் கட்டை, உலைக்களம், தாங்கு கருவி, பட்டறை ஆகிய பல பொருள்கள் உண்டு. எரிதற்கு என் சொல்லுக்கு அடிப்பதற்கு, நசுக்குதற்கு, வீசுதற்கு, கத்தரிப்புதற்கு, வெட்டுதற்கு, தாங்குதற்கு, முட்டுதற்கு ஆகிய பல பொருள்கள் உண்டு.

பட்டடை என்ற சொல்லின் புணர்ச்சி இலக்கணம் வருமாறு. படு - பகுதி, பட்டு-பகுதி-இரட்டித்தல், அடு - துணை வினை. ஐ-விகுதி, படு என்ற பகுதி இரட்டித்து பட்டு என்றானது. பட்டு+அடு+ஐ = பட்டடை

அனலில் உருக்கிய பொன்னைச் சுத்தியால் அடித்து நசுக்கித் தேவையான உருவத்தை அமைத்துக் கொள்ள ஓர் இரும்புத்துண்டு பயன்படுகிறது. இவ்விரும்புத்துண்டு சுமார் 3x3x4 கன அங்குல அளவில் அமைந்திருக்கும். அடிக்கும் போது ஆடாமல் இருப்பதற்கும் அடியைத் தாங்குதற்கும் சாய்ந்து வீழாமல் இருப்பதற்கும் நீண்ட மரக்கட்டையின் நடுவில் உள்ள சதுரக் குழியில் இவ்விரும்புத் துண்டு பதிக்கப்பட்டிருக்கும். இவ்விரும்புத்துண்டின் அடிப்பக்கத்தை தினந்தோறும் தேய்த்து வழுவழுப்பாகவும் வெண்மையாகவும் சமனாகவும் ஆக்குவர். சொல்லர், அனலில் காய்ச்சிய இரும்பை அடித்து நசுக்குதற்குப் பயன்படுத்தும் இரும்புத் துண்டையும் பட்டடை என்று கூறுவர். இவ்விரும்புத்துண்டு முன்னதை விட பெரிதாக இருக்கும். அடிபடுவதால் இதனை பணை என்று கூறுவர். அடிபடும் முரசு, பறை முதலியுவற்றையும் பணை என்று கூறுவர். திரு.வி.க. அவர்கள்

இவ்விரும்புத் துண்டுகளைப் பட்டடை என்று இக்குறளின் உரையில் கூறியுள்ளார். இவர் எறிதற்கு என்ற சொல்லுக்கு அடித்தல், நசுக்குதல் என்ற பொருளைக் கொண்டார்.

உலோகத்தை துண்டாக வெட்டுதற்கு துணை புரியும் கருவி வெட்டிரும்பு, வெட்டும் பொருளின் மேல் வெட்டிரும்பின் கூர்மைப் பக்கத்தை வைத்து வெட்டிரும்பின் தலைப் பகுதியில் அடித்து ஒரு பொருளைத் துண்டாக வெட்டுவர். இவ்வெட்டிரும்பை பட்டடை என்று நங்கை நல்லூர் திருக்குறள் பேரவை செயலர் கோ. பெரியண்ணன் அவர்கள் இக்குறளின் உரையில் எழுதியுள்ளார். இவர் எறிதற்கு என்ற சொல்லுக்கு வெட்டுதல் என்ற பொருளைக் கொண்டார்.

தச்சர் ஒரு பொருளை வெட்டுதற்கு (தறிப்பதற்கு) அப்பொருளை ஒரு கட்டையின் மேல் வைத்து வெட்டுவர். அடியில் வைக்கும் இக்கட்டையை கொத்துக் கட்டை என்று கூறுவர். இக்கட்டையை இரா. இராசேந்திரன் எம்.ஏ. எம்.பில். அவர்கள் இயற்றிய திருக்குறள் அகராதியில் கூறியுள்ளார். எறிதற்கு என்ற சொல்லுக்கு இவர் தாங்குதல் என்ற பொருளைக் கொண்டார்.

மு. வரதராசனார் அவர்கள் எறிதல் என்ற சொல்லுக்கு வீசுதல் என்ற பொருளைக் கொண்டார். இரும்புத்துண்டு, வெட்டிரும்பு, அடிக்கட்டை ஆகிய மூன்றையும் பயன்படுத்திவிட்டு வீசிவிடுவர். தேவைப்படும் போது தேடி எடுப்பர். உள்ளத்தால் ஒன்றுபடாமல் உதட்டளவில் நட்பு செய்பவர். நம்மைப் பயன்படுத்திவிட்டுப் பிரிந்து விடுவர். பின்னர் தேவைப்படும்போது தேடி வருவர். இது மு. வரதராசனார் அவர்களின் உரை. மற்றவர்கள் உரைகளினும் மு.வ. அவர்களின் உரை சற்று மேம்பட்டதாகத் தெரிகிறது.

உள்ளத்தால் ஒன்றுபடாமல் உதட்டளவில் நட்பு செய்பவர் சமயம் வாய்த்தபோது நசுக்குதற்குத் துணை புரியும் பட்டடைக்கு (இரும்புத்துண்டுக்கு) ஒப்பாவார். அவர் வெட்டுதற்குத் துணை புரியும் பட்டடைக்கு (வெட்டிரும்புக்கு) ஒப்பாவார். அவர் வெட்டுதற்குப் பயன்படும் பட்டடைக்கு (தாங்கு கட்டைக்கு) ஒப்பாவார். அவர் பயன்படுத்தி எறிந்துவிடும் பட்டடைக்கு ஒப்பாவார்.

கூடா நட்பு கூடா என்பதை பொய்யாமொழி எறிதற்குப் பட்டடை என்ற தொடரைப் பயன்படுத்தி தெளிவாகவும் வலிவாகவும் திட்பமாகவும் நுட்பமாகவும் சிந்தித்துக் கூறியுள்ளதை நினைந்து நினைந்து மகிழலாம்.

# எமனையே ஏமாற்றிய ஏந்தல்

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

வித்தகராம் 'விஸ்வேஸ்வ ரய்யா' அன்று
வியப்பூட்டும் சாதனைகள் புரிந்தார்; நாட்டில்
எத்தனையோ நீர்த்தேக்கத் திட்ட மெல்லாம்
இவர்மூளைச் சிந்தனையின் விளைச்சல் தானே !
அத்தனைக்கும் முத்தாய்ப்பாய் மைசூர் மண்ணில்
அரியபல்க லைக்கழகம் அவரே கண்டார் !
இத்தனையும் அறிந்ததனால் டில்லி ஆண்டோர்
எழில் 'பார தரத்னா' வழங்கி னார்கள் !

அயராத உழைப்பாலே அற்பு தங்கள்
அடுக்கடுக்காய் நிகழ்த்திநின்ற அந்தச் செம்மல்
வயதினிலும் பெரும்புரட்சி செய்தார்; நூறு
வருடங்கள் தாண்டிஅவர் வாழ்ந்தார் ! ஓர்நாள்
தயக்கமுடன் இதழாளர் ஒருவர் வந்து,
"தயைகூர்ந்து விளக்குங்கள்; எமனை நீங்கள்
நயமாக ஏமாற்றும் வழிதான் என்ன?
நாங்கள் அதை அறிவதற்கே சொல்வீர்!" என்றார்.

"என்னையும்தான் கொண்டுசெல்ல எமனும் என்றன்
இல்லத்துள் நுழைகின்றான்; அந்த நேரம்
என்பணியில் மும்முரமாய் இருப்பேன்; கண்ட
இன்னொருநாள் வந்திடுவோம் என்றே அந்தத்
தென்புலத்தான் போய்விடுவான்; இதுபோல் அன்னோன்
திரும்பவரும் பொழுதெல்லாம் நிகழும்; சொன்னால்
என்உழைப்பே என்உயிரை நின்று காக்கும்;
இதுதானே பேருழைப்பின் மாட்சி!" என்றார்

## வாசகர் வாசகம் (1)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா

அவர்களுக்கு வணக்கம்.

சூன் திங்கள் இதழின் இழையோடலில் சமூகப் பின்புலம் கொண்ட பள்ளு இலக்கியங்கள் படைக்கப்பட்டதன்காரண காரியங்கள் செவ்வனே அலசப்பட்டிருந்தன. சமூக உறவு முறையில் சாதி அடக்குமுறைகளுக்குக் கட்டுப்பட்டு பொருளாதார நிலையில் நலிவுற்று ஒரு சமூகத்தினர் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தமை பள்ளு நூல்கள் வழி தெற்றெனத் தெரிகிறது. பண்டைக்கால இலக்கியத்தில் அகத்துறை பற்றிய அரிய செய்திகளை அள்ளித்தரும் நூல் குறுந்தொகை. அதிலிருந்து மாதர்களின் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களை சஞ்சீவிராயன் நன்கு படம் பிடித்துக் காட்டியிருந்தார். சங்க காலத்தில் நடைமுறையிலிருந்த கள்ளுண்ணலும் புலால் உணவும் சங்கம் மருவிய காலத்தில் புறந்தள்ளப்பட்டு அவற்றை புறக்கணிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்கள் அற இலக்கியங்களைப் படைத்து சொல்லான்மையையும் புலால் மறுப்பையும் மக்கள் பின்பற்றினாலே இறையருள் கிட்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினர்.

அன்புடன்,

**ந. ஞானசேகரன்,** திருலோக்கி

---

## வாசகர் வாசகம் (2)

குறுந்தொகையை விருந்தாக்கிச் சுவைக்கத் தந்து
கொலைமேவல் புலாலுணவை மறுக்கச் சொல்லி
அருஞ்சிறப்பாய்ப் பெண்குலம்தான் ஏற்கும் பண்பாம்
அச்சமொடு மடம்பயிர்ப்பு நாணம் தன்னை
பெருமையுறு நோன்பதனின் சிறப்பைக் காட்டி
பீடுறுநல் இலக்கியமாம் பள்ளுப் பாட்டின்
சிறப்புரைத்துத் திருத்தலத்துப் பெருமை போற்றும்
செந்தமிழாம் தமிழ்ச்சங்க இதழ்தான் வாழ்க !

அன்புடன்,

**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

# தாங்குவார் யார்?

புல்வர்கள் பெற்ற
பெண்மக்கள்
நாங்கள் மூவரே
அறம், பொருள், இன்பம்
என்பார் அன்னை எம்மை
இயல், இசை, நாடகம்
என்பார் தந்தை எம்மை
இவ்மண்ணுலகம் பிடிக்கவில்லையென்று
விண்ணுலகம் சென்று விட்டார்
எம் அன்னை தந்த பெற்றோர்
சிறையில் இருந்தால் தான் கைதிகளா
அறையில் இருக்கும் நாங்களும் அகதிகளே
பொன்நகையும், நன்தொகையும்
வரும் வரன்கள் எல்லாம் கேட்கின்றார்
போடுவதற்கு நட்டும் இல்லை
கொடுப்பதற்கு துட்டும் இல்லை
ஏங்குகிறோம் நாங்கள்
தாங்குவார் யார்?

*சமுத்திராமணாளன்*

# வாசகர் வாசகம் ③

## நேரிசை வெண்பா

ஐவர் மரபுப்பர் ஐந்தமுதம் நேர்சுவை!
ஐவன்ம் நேர்தமிழ் ஆக்கலில் - சைவரும்
பாடும்சங் கச்செய்தி, பைந்தமிழ்ச் சொற் (கோவைநான்)
கோடும்நன் றாமிதழ்ம ணம்!

அன்புடன்,
**புலவர் சி. பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# வாசகர் வாசகம் ④

## அறிவியல் வளர்ச்சி

மகவுக்குச் சோறூட்ட வான்நிலாவை
மாதாதான் அழைத்திட்ட காலம் போச்சு
தகவுடையார் மதிநுட்ப ஆய்வைக் கொண்டு
தானூர்ந்து தண்ணிலவில் தங்கலாச்சு
பகலாக்கிக் கும்மிருட்டைத் தகர்த்தே எங்கும்
பரவிடுதே ஒளிவெள்ளம் மின்சாரத்தால்
வகைவகையாய் எந்திரங்கள் இயங்கும் சக்தி
வாய்த்ததுதான் செய்தொழிலின் முனைப்பு யுக்தி.

நினைத்தவுடன் தொலைவிருப்பார் எண்ணும் செய்தி
நிறைவாகப் பதிந்தளிக்கும் இணைத்தளங்கள்
இணையவுள்ளக் காதலர்தம் மனப் போராட்டம்
எடுத்தியம்பும் கைப்பேசி யலைமுன் னேற்றம்
மனைதோறும் தொலைக்காட்சித் திரைப்படங்கள்
மகளிர்க்கே விருந்தாகும் நாடகங்கள்
அணைகட்டி நீர்தேக்கி மின்உற்பத்தி
ஆக்குகின்ற அறிவாற்றல் மனிதன் சக்தி

வான்பறக்கும் வானூர்தி அறிவின் உச்சம்
வளரிமயம் தொடும்முயற்சி திறனின் எச்சம்
மூண்டெழும் போர் எதிர்கொண்டே கணைகள் வீழ்த்தும்
முளைக்கின்ற நெற்பயிரில் தானா ராய்ச்சி
வீண்பேச்சு விழல் நீரைப் பாய்ச்சல் விட்டு
வெற்றிக்காய் உழைத்துமேநீ இமயம் எட்டு
கூன்பட்ட நுண்ணறிவை நிமிர்த்தல் செய்தே
கூர்தீட்டிப் பகுத்தறிவை வளர்ப்போம் வாரீர்!

அன்புடன்,
**புலவர் ந. ஞானசேகரன்**, திருலோக்கி

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 August 2012 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**